# காரைக்காலம்மையார் பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள்

ந. கந்தசாமி

சைவ தமிழ்ப் பக்தி இலக்கியங்களில் காலப் பழமை வாய்ந்தவை காரைக்காலம்மையார் அருளிச் செய்த பிரபந்தங்கள் ஆகும். அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், மூத்த திருப்பதிகம் முதலியன இப் பிரபந்தங்கள்.

இப்பதிகங்களைக் காரைக்காலம்மையார் திருமுறை என்று பெயரிட்டு அரும்பதக் குறிப்புரையும் எழுதி திரு. வி.க. அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் பேராசிரியர் க. வெள்ளைவாரணர் அவர்கள் மூத்த திருப்பதிகங்கள் இரண்டிற்கும் விளக்கவுரை எழுதி அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்விதழில் வெளியிட்டுள்ளனர். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் அச்சிட்டுள்ள சிற்றிலக்கிய சொற்பொழிவு நூல் வரிசையிலும் அம்மையாரின் பிரபந்தங்கள் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்கள் சிற்சில இடம்பெற்றுள்ளன. அண்மையில் சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தினர் வெளியிட்டுள்ள "தமிழர்களின் தத்துவ மரபுச் செல்வம்" என்னும் நூலிலும் காரைக்காலம்மையார் காலத்திய சைவ சமயம் குறித்த கட்டுரை ஒன்று காணப்படுகிறது. அன்றியும் தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய அறிஞர்கள் பலரும் அம்மையாரின் வரலாறு குறித்தும் நூல்கள் குறித்தும் சுருக்கமாக எழுதியுள்ளனர். இதுகாறும் அம்மையாரின் பிரபந்தங்கள் பற்றிய முழுமையான ஆராய்ச்சி வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இக்கட்டுரையில் காரைக்காலம்மையார் அருளிய பாடல்களில் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சில ஆராயப்படுகின்றன. இறைவன் திருவருளால் மெய்ஞ்ஞானம் வாய்க்கப் பெற்றவர் காரைக்காலம்மையார். பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் இயல்புகளையும் திருவருள் ஞானத்தினால் உள்ளவாறு உணர்ந்தவர். சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகள் பல அம்மையாரின் பிரபந்தங்களில் ஆங்காங்கே காணப்பெறுகின்றன.

## ஈசனே முழுமுதற் கடவுள்

ஈசனைப் பரம்பொருளாகக் கண்டவர் அம்மையார். அவனைவிட வேறு உறுதிப் பொருள் இல்லை என்பது அம்மையாரின் உறுதியான எண்ணமாகும். இதனை,

"ஈசன் அவனல்லா தில்லை"[1]

எனவரும் பாடற்பகுதி அறிவுறுத்துகிறது. முத்தொழிலும் அவன் ஆணையால் நிகழ்வன என்பதை,

"இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான் — இறைவனே
எந்தாய் எனஇரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான்"[2]

1. திரு. இர. 2
2. அற்புத. 5

எனவரும் பாடல் புலப்படுத்துகிறது. அவனே பிரான்.[3] பிரான் என்ற சொல் தலைவனைக் குறிப்பதாகும். தொல்லுலகுக்கு ஆதியாய் விளங்குபவனும் அவனே ஆகும்.[4] திருமாலையும் சிவனையும் அம்மையப்பராக இணைத்தே காரைக்காலம்மையார் காண்கின்றார். சான்றாக,

"ஒருபால் உலகளந்த மாலவனும் மற்றை
ஒருபால் உமையவளாம்"[5]
"செங்கண் திருமாலைப் பங்குடையான்"[6]
"நீருருவ மேகத்தாற் செய்தனைய மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணுமே பண்டு"[7]
"பெண்புணரும் அவ்வுருவோ மாலுருவோ ஆனேற்றாய்"[8]
"தன்போலும் பொற்குன்றும் நீல மணிக்குன்றுந் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது"[9]

முதலிய பாடல் வரிகளைக் கூறலாம்.

## மும்மூர்த்தி

இறைவனை அம்மையார் மும்மூர்த்தியாகவே காண்கின்றார். மூவர்க்குள்ளும் நிறைந்து, அவ்வவர் தொழில்களைச் செய்வித்தும் அதற்கப்பாற்பட்டும் அறியமுடியாது நிற்பவர் சிவபெருமான் என்ற கருத்தினை,

"அரனென்கோ நான்முகன் என்கோ அரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன் — முரண் அழியத்
தானவனைப் பாதத் தனிவிரலாற் செற்றானை
யானவனை எம்மானை இன்று"[10]

எனவரும் பாடல் உணர்த்துகின்றது. அம்மையார் வாழ்ந்த காலத்தில் வைணவ நெறியையும் சகோதர நெறியாகச் சைவ சமயம் ஏற்று இணைந்து விளங்கிய திறம் உய்த்துணரத்தக்கது. இப்போக்கு முதலாழ்வார் பாடல்களிலும் காணப்படுகிறது.

## அனைத்தும் இறைவனே

சைவ சித்தாந்தத்தில் இறைவனை நிமித்த காரணனுக் கூறுவர். ஆயினும் உபநிடதம், ஆகமம், புராணங்களிலும் ஏனைய திருமுறைகளிலும் இறைவனை முதற் காரணமாகவும் குறித்துள்ளனர். எனவே, ஐம்பெறும் பூதங்களும் உயிர்களும் மற்றும் எவ்வகைப் பொருளும் இறைவனாகிய முதற் பொருளிலிருந்து விரிந்து வெளிப்பட்டன என்னும் கருத்தினை.

"மூவே மூலகங்கள் ஆவானை"[11]
"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே — அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாசம்
அப்பொருளுந் தானே அவன்"[12]
"அவனே இருசுடர்தீ ஆகாச மாவான்
அவனே புவிபுனல்காற் றாவான் — அவனே
இயமான னாயட்ட மூர்த்தியுமாய் ஞான
மயமாகி நின்றானும் வந்து"[13]

3. அற்புத. 10
4. அற்புத. 10, 17
5. அற்புத. 41
6. அற்புத. 52
7. அற்புத. 54
8. அற்புத. 59
9. அற்புத. 83
10. அற்புத. 18
11. அற்புத. 19
12. அற்புத. 20
13. அற்புத. 21

எனவரும் பாடல்களில் அம்மையார் குறித்துள்ளனர். முதற் காரணமாகிய மாயைக்கு ஆதாரம் அத்தன்தான் ஆதலின், இறைவனை முதற் காரணமாகக் கூறுதல் உபசார வழக்காகும். அனைத்திற்கும் மூலப் பொருளாயுள்ள இறைவனை மக்கள் மட்டுமன்றி வானவர்களும் முடிதாழ்த்தி, மலர்தூவி, அடிவணங்கிப் போற்றுவர் என்ற கருத்தை,

"நினைந்திருந்து வானவர்கள் நீண்மலராற் பாதம்
புனைந்தும் அடிபொருந்த மாட்டார்"[14]
"விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடந் தேய்ப்ப — முசிந்தெங்கும்
எந்தாய் தழும்பேறி ஏபாவம் பொல்லாவாம்
அந்தா மரைபோல் அடி"[15]

என்று அம்மையார் போற்றியுள்ளனர்.

## சொரூப இலக்கணம்

இறைவனின் தன்னியல்பினைச் சொரூப இலக்கணம் என்று சித்தாந்த நூல்கள் தெளிவுறுத்தும். இந்நிலையில், இறைவனுக்கென்று தனியே உருவமோ பெயரோ இல்லை. எவ்விடத்தும் எப்பொருளிலும் கலந்தும் கடந்தும் விளங்கும் பரம்பொருளை,

"எக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம்"[16]
"அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் — என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது"[17]

எனவரும் பாடல்களில் சொரூப இலக்கணம் தோன்ற அம்மையார் போற்றியுள்ளார். இறைவனுக்கு ஞானமே உருவமாகும் என்பதை,

"ஞான மயனாகி நின்றானும் வந்து"[18]

என்ற பாடலில் சுட்டியுள்ளார். ஞானமே ஒளியாகச் சுடர்விடுகிறது. ஆதலின் சோதி மயமாய் விளங்கும் இறைவனை,

"காண்பார்க்குச் சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே"[19]
"கூடியுலவு சொன்முடிவொன் றில்லாத சோதியாய்"[20]
"நிலாவிருந்த செக்கரவ் வானமே யொக்குந் திருமுடிக்கே"[21]
"நலம்பெற்று எதிராய செக்கரினும் இக்கோலஞ் செய்தான்
முதிரா மதியான் முடி"[22]
"சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
போர்ந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியவாம் — நேர்ந்துணரில்
தாழ் சுடரோன் செங்கதிருஞ் சாயுந் தழல்வண்ணன்
வீழ்சடையே என்றுரைக்கும் மின்"[23]

எனவரும் பாடல்களில் ஒளிமயமாகவே கண்டு பணிந்துள்ளார். இறைவன் கையிலுள்ள அனலினால் அவன் கை சிவப்பு நிறம் பெற்றதா அல்லது கையின் அழகிய செவ்வண்ணத் தால் அனல் செந்நிறம் அடைந்ததா என்று கவிதை நயம் தோன்ற அம்மையார் பாடி யுள்ளார்:

14. அற்புத. 15
15. அற்புத. 76
16. அற்புத. 33
17. அற்புத. 61
18. அற்புத. 21
19. அற்புத. 17
20. அற்புத. 63
21. அற்புத. 64
22. அற்புத. 68
23. அற்புத. 82

"அழலாட அங்கை சிவந்ததோ அங்கை
அழகால் அழல்சிவந்த வாறே"[24]

## உருவத் திருமேனியின் காட்சி

சொரூப நிலையிலுள்ள இறைவன் உயிர்களிடத்தில் கொண்ட கருணை காரணமாக அவ்வுயிர்களைக் கடைத்தேற்றும் பொருட்டுப் பல்வேறு உருவத் திருமேனிகளைக் கொள்கிறான். இத்திருமேனிகள் சிறப்பு வாய்ந்தவை. இறைவன் திருமேனி ஒளிமயமாகவே அம்மையார்க்குத் தோன்றுகின்றது. கதிரவன் எழுந்த காலைப் பொழுதைப் போல் இறைவனின் மேனி செந்நிறத்தால் சுடர் விடுகிறது. அவன் மேனியில் பூசியுள்ள திருநீறு கதிரவன் எரிக்கும் உச்சிப்பொழுதினைப் போல வெண்ணிறம் கொண்டு விளங்கும். அந்திக் காலத்துக் கதிரவனைப் போலச் செஞ்சடைக் கற்றைகள் திகழ்கின்றன. மாலைக் காலத்திற்குப் பின்னர்த் தோன்றும் மிக்க இருளைப் போல ஈசனின் நீலகண்டம் திகழ்கிறது. பகல், இரவு அனைத்தையும் இறைவனின் திருமேனியில் அம்மையார் காண்கின்றார். இறைவன் கால தத்துவமாக விளங்குகிறான் என்ற கருத்தும் எண்ணத்தக்கது. இச்சிந்தைகள் அனைத்தையும்,

"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு — மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு"[25]

என்ற பாடல் தன்னகத்து கொண்டுள்ளது.

## உள்ளத்தில் உள்ளவன்

இறைவன் அகத்தும் புறத்தும் இருப்பவன். எனினும், இறைவனை உள்ளத்தில் கண்டு வழிபடும் யோக நெறியை அற்புதத் திருவந்தாதியில் அம்மையார் பல இடங்களில் சுட்டியுள்ளார்:

"மொய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தானென்பன் யான்"[26]
"எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன்"[27]
"ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தினுள்ளடைத்தேன் — ஒன்றேகாண்"[28]
"காதலாற் காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே"[29]
"எந்தையா உள்ளம் இது"[30]
"பிரானவனை எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க் கெளிது"[31]
"எம்மானை உள்நினைந்த சிந்தையராய் வாழும் திறம்"[32]
"திறத்தால் மடநெஞ்சே சென்றடைவ தல்லாற்
பெறத்தானு மாதியோ பேதாய்"[33]
"வெள்ளநீ ரேற்றான் அடிக்கமலம் நீவிரும்பி
உள்ளமே எப்போதும் ஓது"[34]
"தெளிவுள்ள சிந்தனையிற் சேர்வாய்"[35]

24. அற்புத. 98
25. அற்புத. 65
26. அற்புத. 6
27. அற்புத. 10
28. அற்புத. 11
29. அற்புத. 17
30. அற்புத. 23
31. அற்புத. 45
32. அற்புத. 46
33. அற்புத. 47
34. அற்புத. 73
35. அற்புத. 89

## எளிவந்த தன்மை

மலச்சார்புடைய மாலுக்கும் நான்முகனுக்கும் அரியனாய் விளங்கும் இறைவனை அறிவதற்குப் பதி ஞானம் தேவை. இந்த ஞானத்தைப் பதியாகிய இறைவனே வழங்குதல் வேண்டும். அம்மையார், "மூவே முலகங்கள் ஆவானைக் காணும் அறிவு, இன்று நமக்கெளிதே"[36] என்று சுட்டுதல் நோக்கத்தக்கது. இறைவனின் எளிவந்த தன்மையையும் அவனைச் சிந்தை செய்து வாழும் திறத்தையும் மற்றுமொரு பாடலில் அம்மையார் குறித்துள்ளனர்.[37] இறைவனைக் காண்பதற்கு புத்தக ஞானம் பயன்படாது. இதனை,

"நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக"[38]

என்ற பாடலில் தெளிவுறுத்தியுள்ளார்.

இறைவனே மெய்ப்பொருள் என்ற உணர்வு வாராதவர்கள் அவனை இகழ்வர்.[39] தத்துவங்களுக்குக் கட்டுப்பட்ட ஏனையோரால் அறியவொண்ணாத பெருமைபடைத்த இறைவன் தத்துவங்களின் கட்டினை நீங்கிய பெரியோர்களின் பேருணர்வு மயமாக விளங்குகிறான்.[40]

## சிவசாதனம்

சிவனை உணர்வதற்கும் கூறுவதற்கும் திருவைந்தெழுத்தும் திருநீறும் சிறந்த சாதனங்களாகும். திருவிரட்டைமணிமாலையில், எல்லா மந்திரங்களிலும் தலைமை பெற்றது திருவைந்தெழுத்து என்றும் அதனை ஓதிச் சாதனை செய்து கலைஞானங்களை உணர்ந்த ஞானிகள் இறைவனின் திருவடியைக் காணும் பேறு பெற்றவர்கள் என்றும் கூறுவர் அம்மையார்.[41]

திருநீற்றின் சிறப்பினையும் அம்மையார் பல இடங்களில் குறித்துள்ளார்.[42] உலகினை மகாசங்கார காலத்தில் ஒடுக்கி அருளும்பொழுது எல்லாப் பொருள்களும் நீறாகிவிடும். அந்தப் பொடியை உடலினில் பூசி இறைவன் ஊழிக் கூத்தினை நிகழ்த்துவன். இறைவன் அடியார்களும் அவனுக்குரிய திருநீற்றினை அணிந்து கொள்கின்றனர். தூய்மையினையும் புனிதத்தினையும் குறிக்கும் திருநீறு இறைவனை உணர்வதற்கு உதவும் சிறந்த சாதனமாகும்.

## அருளின் மாண்பு

சொரூப நிலையில் இருக்கும் இறைவன் தடத்த நிலையில் பல்வேறு உருவங்களையும் கொண்டு உயிர்களை உய்விப்பதற்குக் காரணமாக இருப்பது அவன் அருளே ஆகும். அவ்வருளையே சக்தி என்றும் சித்தாந்த நூல்கள் குறிக்கின்றன. இவ்வருளின் மாண்பினை,

"அருளே உலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானல் — அருளாலே
மெய்ப்பொருளைநோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு"[43]
"பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்றன் பேரருளே வேண்டி"[44]

36. அற்புத. 19
37. அற்புத. 46
38. அற்புத. 33
39. அற்புத. 29
40. அற்புத. 30
41. திரு. இர. 10
42. திரு.இர. 14; அற்புத. 7,56.
43. அற்புத. 9
44. அற்புத. 45

என்ற பாடல்களில் அம்மையார் புலப்படுத்தியுள்ளார். இத்திருவருளின் நிலையமாகத் திகழ்வது இறைவனின் திருவடியே ஆகும். இத்திருவடியின் துணையினால் கால தேவனையும் வென்று பேரின்பம் பெறலாம் என்ற கருத்தையும் அம்மையார் குறித்துள்ளார்.[45]

## மெய்ப்பொருள்

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களும் உண்மைப் பொருள்களே. ஆயினும், உயிர்களாகிய பசுவையும் தளையாகிய பாசத்தையும் மெய்ப்பொருள் என்று சொல்லும் வழக்கமில்லை. பதியாகிய இறைவன் ஒருவனே மெய்ப்பொருளாகும். இதனையே சத்து என்றும் கூறுவர். சத்து என்ற சொல்லிற்கு என்றும் ஒருபடியாக உள்ளது என்பது பொருளாகும். ஆதலின், எக்காலத்தும் எவ்விடத்தும் ஒருபடித்தாக இருக்கும் உண்மைப்பொருள் பதியே ஆகும். இதனையே மெய்ப்பொருள் என்று அம்மையார் குறித்தனர். ஏட்டுக் கல்வியினாலோ உலகியற் பொருளை ஆராயும் அறிவியல் கல்வியாலோ இம்மெய்ப்பொருளைக் காணவொண்ணாது. இறைவனே வழங்கும் திருவருளினால் மட்டும் மெய்ப்பொருளைக் காணமுடியும். இத்திறத்தினை அம்மையார்,

"அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்"[46]

எனக்கூறுதல் எண்ணத்தக்கது.

## பக்தியும் வழிபாட்டின் பயனும்

இறைவனை அடைவதற்கு ஞானமே முடிந்த வழியாகும். ஞானத்தைத் தருவது பக்தியாகும். பக்தியினால் விளையும் பல்வேறு பயன்களையும் அம்மையார் தம் பாடல்களில் பொறித்துள்ளார். திருவிரட்டைமணிமாலையில், துன்பம் வரும்பொழுது தளர்ச்சி ஏற்படும், அத்தளர்ச்சிக்கு இடம் தராது தளராமல் இறைவனையே வணங்க வேண்டுமென்று அம்மையார் ஆற்றுப்படுத்துகிறார்.[47] ஈசனைத் தவிர வேறுபொருள் இல்லை எனத் திடமாக நினைத்து மனத்தினால் எண்ணி அவனை மறவாது வாழ்வாருக்குப் பிறவாமைப் பேரின்பத்தைத் தந்தருள்வான்.[48] அவனைத் தலைவனைக் கொண்டு பலநாளும் பரவி நெகிழ்கின்றவர்களின் துன்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான்.[49]

இறைவனின் பொற்கழலை இறைஞ்சிப் பணிந்து பன்னாளும் பக்தி செய்து வழிபடுவாரின் துன்ப வெள்ளத்தினின்றும் நீக்கிப் பேரின்பத்தை வழங்கி அருள்வான். இறைவனடியாரைப் பேணுகின்றவரின் நிழல்பட்ட மாத்திரத்தில் வினைகள் நில்லாது ஓடும். ஆதலின் இறைவனையே வணங்குகின்றவர்களைத் தொல்வினை நெருங்காது அகலும். பல வினை வந்து ஒருவரைப் பற்றுவதற்கு முன்னரே இறைவனை எண்ணி வழிபடுதல் வேண்டும்.[50] இறைவனின் திருவடிக்கு அன்பு செய்வதற்கென்றே புலன்கள் ஒருவர்க்கு பொருந்தியுள்ளன. ஆதலின் தீய வழியில் செல்லாது சிவபுண்ணியங்களைச் செய்தல் வேண்டும்.[51] இறப்பதற்கு முன்னரே ஈசனின் திருப்புகழ் கேட்டும் சிந்தித்தும் வாழ்தல் வேண்டும்.[52]

அற்புதத் திருவந்தாதியிலும் பக்தியின் மாண்பு பகரப் பெற்றுள்ளது. அம்மையார் அவதரித்துப் பேசக் கற்றுக்கொண்ட நாள் முதலாகவே ஈசனிடம் பெருங்காதல் கொண்டு அவன் திருவடியையே தியானிக்கும் பேறுபெற்றவர்.[53] இறைவன் தன் துயரைக் களையாவிட்டாலும் பின்பற்றுவதற்குரிய நெறியைப் பணித்தருளாவிடினும் அவர்பால் கொண்ட அன்பு ஒருபாலும் குன்றாது என்கிறார்.[54]

45. அற்புத. 69
46. அற்புத. 9
47. திரு. இர. 1
48. திரு. இர. 2
49. திரு. இர. 4, 6
50. திரு. இர. 12
51. திரு. இர. 16
52. திரு. இர. 20
53. அற்புத. 1
54. அற்புத. 2

ஏழு பிறப்பிலும் ஈசனுக்கே ஆட்பட்டு அன்பு செலுத்துவதைத் தவிர, பிறிதொருவர்க்கு ஆட்பட அம்மையார் அறவே விரும்பவில்லை.[55] இறைவனுக்கே ஆட்பட்ட அம்மையார் அல்லலை அறியுமாறு முறையிட்டாலும் இறைவன் திருச்செவி செல்லாமல் இருப்பது யாது கருதியோ என்று அம்மை வினவுகிறார். இறைவனின் திருமேனி செம்மையாகவும், திருமிடறு கருமையாகவும் இருப்பதால் போலும் தன் சொல்லுக்கு செவி சாய்க்காமல் இறைவன் இலங்குகிறான் என்கிறார்.[56]

இறைவன் திருத்தாளைச் சேர்ந்தால் துயர் நீங்கி வினைக் கடலை உண்டாக்கும் கடலை நீந்திப் பேரின்பமாகிய உய்தியைப் பெற்றதாகப் பேசுகிறார்.[57]

இறைவன் யோகியர்க்கு உள்ளத்தில் காட்சி தருகிறான். கைகூப்பி வணங்கும் பக்தர்களுக்கு உருவத் திருமேனியோடு காட்சி வழங்குகிறான். காதல் பெருகிக் காண்கின்ற பக்குவ ஆன்மாக்களுக்குச் சிந்தையுள் சோதிமயமாகத் தோன்றுகிறான்.[58] இறைவனின் திருவுருவத்தை இடைவிடாமல் தியானிக்கும் அம்மையார் அவ்வுருவத்தையே தனக்குக் கிடைத்த புதையலாகப் போற்றுகிறார்.[59] தன் உள்ளத்தை நோக்கி அம்மையார் கூறும் கட்டளைகள் உண்மையான பக்திக்கு உறுப்பாக ஒளிர்பவை. "மடநெஞ்சமே, மேலும் மேலும் இறைவன் தொண்டர்களின் பாதத்தை வாயாரப் போற்றி வாழ்த்தி வணங்குக. இறைவன் அடியாரை எண்ணாத மக்களின் கூட்டத்தை விட்டு விலகுக" என்கிறார்.[60] இறைவனைப் போலவே இறைவனடியாரையும் வழிபடுதல் வேண்டும் என்று அம்மையார் குறிப்பதால் தொண்டர்களின் பெருமை எளிதில் புலனாகும்.

இறைவனை வழிபடுவதற்கு வழிகாட்டும் சமயநெறியினைப் பெருநெறி என்று அம்மையார் பேசுகிறார். அந்நெறியிற் சென்றால் இறைவன் திருவருளைப் பெறலாம்.[61] சடையப்பனாகிய சிவனின் பாதங்களைப் பணிந்தும் தாமரை மலர்களால் அணிந்தும், சிவனடியார்களை ஏத்தத் துணிந்தும் பணிசெய்யும் பக்தர்களின் பெருமித உள்ளத்திற்கு இணையாக வேறொன்றுமில்லை.[62] முப்புரம் எரித்த முழுமுதற் கடவுளின் தாமரை போன்ற திருவடிகளைச் சார்ந்தமையால் காலனையும் வென்று கடுநரகத்தையும் நீத்துப் பிறவிக்கு ஏதுவாகிய இரு வினைகளையும் களைந்துவிட்டதாக அம்மையார் மிடுக்குடன் பேசுகிறார்.[63] இறைவனைக் காணப்பெற்றால் கண்ணார அவன் திருமேனியை நோக்கியும், கையாரக் கூப்பி வணங்கியும், மனமார நினைத்தும், காலமெல்லாம் இன்புறுவேன் என்று தன் ஆசையை அம்மையார் புலப்படுத்துகிறார்.[64]

பிறவிக்குக் காரணமாய் இருக்கும் இரு வினைகளும் ஆணவமாகிய இருளினால் விளைவன. ஞான மயமான இறைவனையே பற்றிப் பிடித்துப் பாமாலை சூட்டியும் ஈசன் பொன்னடிக்குப் பூமாலை புனைந்தும் போற்றினால் வினையும், வினைக்கு ஏதுவாகிய ஆணவ இருளும் முற்றிலும் மறையும் என்று அறிவுறுத்துகிறார்.[65] முடிவாக, அற்புதத் திருவந்தாதியைப் பக்திப் பெருக்குடன் பாடிப் பரம்பொருளை ஏத்துகின்றவர்கள் நீங்காத பேரன்பு தோன்றி ஈசனையே பரவும் பேற்றினை அடைவர் என்கிறார்.[66]

## வேண்டுகோள்

ஒன்றும் வேண்டாத அம்மையார் இறைவனை நோக்கி சிலவற்றை வேண்டுகிறார்.

அ. இரவினில் அனலேந்தி எரியில் பாய்ந்து ஈசன் ஆடும் இடத்தைத் தனக்கு

55. அற்புத. 3
56. அற்புத. 4
57. அற்புத. 16
58. அற்புத. 17
59. அற்புத. 24
60. அற்புத. 40
61. அற்புத. 45
62. அற்புத. 79
63. அற்புத. 89
64. அற்புத. 85
65. அற்புத. 87
66. அற்புத. 101

ஒருநாளாவது காட்ட வேண்டுமென்றும், அவ்விடத்தைக் காணும் பேராசை ஒரு போதும் தன்னைவிட்டு நீங்காது என்றும் அம்மையார் குறிக்கின்றார்.67

ஆ. அனைத்து அண்டங்களுக்கும் அதிபதியாய் உள்ள ஈசனைக் கண்டு, இறைஞ்சிப் பணிவிடை செய்யும் தொண்டினைத் தவிர அண்டங்களையே கொடுத்தாலும் அம்மையார் வேண்டாமையினை வெளிப்படையாகப் புலப்படுத்தியுள்ளார்.68

இ. இறைவனைச் சூழ்ந்திருந்து வழிபடும் நல்ல பேய்க்கணத்தில் தானும் ஒருவராக இருக்கும் பேற்றினைத் தவிர வேறொன்றையும் அம்மையார் விரும்பவில்லை.69

இக்குறிப்புக்களினால் அம்மையாரின் உயர்ந்த குறிக்கோள் தெளிவாகப் புலனாகிறது.

## முடிவுரை

காரைக்காலம்மையார் பிறந்து மொழி பேசக் கற்றுக்கொண்ட நாள்முதலாகவே இறைவனிடம் எல்லையற்ற அன்பு கொண்டவர். அவருடைய பக்தி கருவிலேயே அமைந்தது. அவருடைய சொற்கள் அனைத்தும் பக்தியில் நனைந்தவை. அவர் பெற்ற பதி ஞானத்தினால் அடைந்த அனுபவங்களை அழகுறப் பாடியுள்ளார். சைவ சித்தாந்தம் குறிக்கும் பதிப் பொருளின் இயல்பும், உயிர்கள் உய்தி பெறுவதற்குரிய சாதனங்களின் சால்பும் வழிபாட்டின் பயனும் இவர் பாடல்களில் தெளிவாகச் சுட்டப்பெற்றுள்ளன.

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

திரு. இர. — திருவிரட்டை மணிமாலை
அற்புத. — அற்புதத் திருவந்தாதி
எண் — பாடல் எண்

## துணைமை ஆதார நூல்கள்


*பதினோராந்திருமுறை, காசிமடத்துப் பதிப்பு, திருப்பனந்தாள், 1950*

*பெரிய புராணம், கோவைத் தமிழ்ச் சங்கம், கோயமுத்தூர், 1946*

*வெள்ளைவாரணர்,க., பன்னிரு திருமுறை வரலாறு, 2ஆம் பாகம், அண்ணாமலைநகர், 1969*

*சுப்பிரமணிய பிள்ளை, கா., இலக்கிய வரலாறு 2ஆம் பாகம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 1958.*

*செந்தமிழ்ச் செல்வி,* Volume *16, 1937–38*

*செந்தமிழ்ச் செல்வி,* Volume *27, 1952–53*

*சைவம், மலர் 2, 1916, இதழ் 9*

*கலைக்களஞ்சியம், தொகுதி 3.*

SADASIVA PANDARATHAR, T.V., A History of Tamil Literature (250:600 A.D.)

SOMASUNDARAM PILLAI, J.M., Two Thousand Years of Tamil Literature, Annamalainagar, 1959.

Journal of the Annamalai University, Volume 25 (1964).


67. *அற்புத. 70*
68. *அற்புத. 72*
69. *அற்புத. 86*